<u>அறிவிப்பு</u>

**07.10.2025**

ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவானது தன்னார்வ சட்டப்பணியாளர்களுக்கான சேவை புரிய விருப்பமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கிறது.

ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் பவானி, பெருந்துறை, கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், அந்தியூர், கொடிமுடி மற்றும் மொடக்குறிச்சி @ எழுமாத்தூர் ஆகிய வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு 50 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் உள்ள ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குவிற்கு சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

மேற்படி சட்ட தன்னார்வலர்களுக்கான கடமை சேவை மட்டுமே, இது நிரந்தர பணிக்கானது அல்ல முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை சம்பளம் அல்லது ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த கௌரவ ஊதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை அறியவும்.

தன்னார்வ சட்டப்பணியாளர்கள் கல்வியறிவு உடையவர்களாகவும், சாதாரணமாக பள்ளி இறுதிவகுப்பு படித்தவர்களாகவும், விரிவாக புரிந்துணரும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் வகைகளின் கீழ் வருபவர்களில் பொதுமக்களுக்கு சேவை செய்ய ஆர்வமுள்ளவர்கள் 27.10.2025 **மாலை** 5 மணிக்குள் நேரிலோ அல்லது தபால் வழியாகவோ விண்ணப்பிக்கலாம்.

1. ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
2. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
3. M.S.W. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
4. அங்கன்வாடி தொழிலாளர்கள்
5. மருத்துவர்கள்

6. மாணவர்கள் மற்றும் சட்டம் படிக்கும் மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞர்களாக சேரும் வரையில்)
7. அரசியல் சாராத சேவை சார்ந்த தொண்டு நிறுவனங்கள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள்
8. மகளிர் குழுக்களின் உறுப்பினர்கள்
9. நலிந்தவர்களுக்கான சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள்
10. அடிப்படை கல்வி தகுதியுடைய சேவை மனப்பான்மை உள்ளவர்கள்

நேர்காணல் தேதி : 05.11.2025

நேர்காணல இடம்: ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
ADR கட்டிடம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
ஈரோடு 638 011

விண்ணப்பத்தினை ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.

**https://erode.dcourts.gov.in/**

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் வருகின்ற 27.10.2025 மாலை 5 மணிக்குள் வந்து சேர வேண்டிய முகவரி:

செயலர்,
ஈரோடு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
ADR கட்டிடம், ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்,
ஈரோடு 638 011.

**(Sd/-Tmt.S. SAMEENA)**
**Chairman/Principal District Judge,**
**District Legal Services Authority,**
**Erode**

| |
|---|
| விண்ணப்பதாரர்<br>புகைப்படம்<br>சுய<br>சான்றொப்பம்<br>இடவும் |

# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஈரோடு

## தன்னார்வ சட்டப் பணியாளர்களுக்கான விண்ணப்ப படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2 | தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| 3 | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4 | பாலினம் | : | |
| 5 | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி | : | |
| 6 | நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 7 | காவல்துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 8 | இதற்கு முன் சட்ட தன்னார்வலராக சேவை செய்த அனுபவம் உள்ளதா?<br>ஆம் எனில் அதன் விவரம்<br><br>(வேறு ஏதாவது சேவை அனுபவம் இருந்தால் அதன் விவரம்) | : | |

தன்னார்வ சட்டப்பணியாளர்களுக்கான கடமை சேவை மட்டுமே, உத்தியோகம் இல்லை, இந்த பணி முற்றிலும் தற்காலிகமானது மற்றும் அதற்கு அடிப்படை ஊதியம் எதுவும் இல்லை. சேவைக்கு தகுந்த கௌரவ ஊதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்